முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் ஆசி நூல்**

**(விகாரி ஆடி மாதம் 26ம் திகதி முதல் ஆவணி மாதம் 1ம் திகதி வரை ஆகஸ்ட் 11ம் திகதி முதல் ஆகஸ்ட் 18ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** ஞானத்தலைவனே ஆறுமுகா
ஞானயுகம் படைக்க வேண்டி
ஞானிகளை அவதரிக்க செய்து
ஞானதேசிகனார் வழி சூட்சும இயக்கம்

**2.** இயக்கம் புரியும் எழில் முருகனே
இனிதே அகத்தியனும் உமை போற்றி
தயக்கமற பாரதம் தமிழகம் தன்னில்
தக்க விகாரி நள்ளி திங்கள் தன்னில்

**3.** தன்னிலே இருபானார் திகதி மேல்
தாமுரைக்க யாளி திங்கள் ஏகதிகதி வரை
(விகாரி வருடம் ஆடி மாதம் 26ம் நாள் 11.08.2019, ஞாயிறு முதல் ஆவணி மாதம் 1ம் நாள் 18.08.2019, ஞாயிறு முடிய)
இன்னாட்களில் நடக்கும் நிகழ்வாக
எதிர்கால பலன் குறித்த ஆசிதனை உரைப்பேன்

**4.** உரைக்கவே தமிழக ஆளுமை
உரிமைக்காக தமிழக நலனுக்காக
குறைவிலா மத்திய உதவிகளை
கேட்கப் பெற்று இயக்கும் வண்ணம்

**5.** வண்ணமுடன் செயல் ஆற்றிட
வளர்ச்சி காணும் தமிழகம்
எண்ணம் வழி மாநில மேம்பாடு
எழுச்சியான சேவையாக படைக்கவே

**6.** படைக்கவே தமிழகம் தானும்
பின் தங்கிய நிலையினின்று மீளும்
சோடையான நிலைகள் ஏதுமிலா
சுருதிபடி சகல துறைகளும் தருமப்படி

7. தருமப்படி செயல்பாடு காணவே
தலை நிமிரும் தமிழகம் காணும்
தருமநெறி மீறி பதவியாளர்களும்
தமிழக மக்கள் அதிகாரிகளென

8. என இவர்கள் அனைத்து பேரும்
இன்னும் சுயநலம்பட வாழ்வை
ஞானமிலா வஞ்சம் களவு கையூட்டு (லஞ்சம் வாங்குதல்)
நாட்டிடுவேன் பேராசைபட நடந்து வந்தால்

9. வந்திட இயற்கை பொய்க்கும்
வளம் தரும் மழை வளம் இன்றி
சிந்தை தெளிவிக்கும் தூய காற்று
செப்பிடுவேன் இயற்கை பலமும் இன்றி

10. இன்றியே இயற்கை பேரிடர்கள்
எதிர்மறைபட பிணி சோடைகள்
நன்றிலா அழிவு பலவகையில்
நாட்டிடுவேன் இந்தியா தமிழகம் காண நேரும்

11. நேருமைபட அன்னதனால் மாற்றம்
நிலவுலகில் கண்டு வருதலுற
பெருமைபட எல்லா வளமும் கூடி
புகலுவேன் தமிழகம் பாதுகாப்பும் பெறும்

12. பெருமைமிக்க புண்ணிய பூமியில்
பேராசான் அரங்கன் தருமம் வளர
வருமுலகில் அனைத்து தரப்பினரும்
வணங்கி வந்து இணைந்து சேவை ஆற்றி

13. ஆற்றியே தரும நெறிபட நடக்க
அணுகிய இந்த வார நிகழ்வாக
மாற்றம் நடக்கும் தமிழக மண்ணில்
மத்தியின் கருணையும் கிடைக்கும் வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அகத்தியமகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விகாரி வருடம் ஆடி மாதம் 26ம் நாள் 11.08.2019, ஞாயிறு முதல் ஆவணி மாதம் 1ம் நாள் 18.08.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் இந்தியாவிலும் தமிழகத்திலும் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

ஞானத்தின் தலைவனே முருகப்பெருமானே இவ்வுலகினில் கலியுகம் மாற்றி ஞானயுகம் படைத்திடவே உலகமெங்கும் ஞானிகளை அவதரிக்க செய்து வழி நடத்தி, இச்சமயம் ஞானதேசிகனார் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக உலகிற்கு சூட்சுமமாக அற்புதமான செயல்பாடுகளை நடத்தி உலகினில் மாற்றங்களை உருவாக்கி வருகின்ற ஞானத்தலைவன் முருகப்பெருமானே எம் தலைவனே அகத்திய மகரிஷி யானும் உம்மைப் போற்றியே தயக்கம் ஏதும் இன்றியே இந்த பாரத தேசத்திலும் முருகா தாம் அவதரித்த ஞானபூமியான தமிழகத்திலும் விகாரி வருடம் ஆடி மாதம் 26ம் நாள் 11.08.2019, ஞாயிறு முதல் ஆவணி மாதம் 1ம் நாள் 18.08.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உலகோர் அறிய அரங்கமகான் கேட்க உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்தியமகரிஷி.

தமிழகத்தை ஆட்சி செய்கின்ற ஆட்சியாளர்கள் தமிழக உரிமைகளை காக்கவும் தமிழகம் நலம்பெற வேண்டியும், மத்திய அரசின் உதவிகளை குறைவின்றி நிறைவாக கேட்டுப் பெற்று தமிழகத்தின் செயல்பாடுகளை நல்விதமாக செயல்படுத்திட தமிழகம் நல்ல வளர்ச்சிகளை காணுமப்பா, மக்களும் மகிழ்வுடன் வாழ்வார்களப்பா. மக்கள் விரும்பியபடி மாநில மேம்பாடுகளை எழுச்சியுடன் செயல்படுத்திட தன்னலமற்று மக்கள் நலனே பெரிதென எண்ணி மக்கள் சேவையை தொண்டுள்ளத்தோடு செய்திட தமிழகம் பின் தங்கிய நிலையில் இருந்து மீட்சி அடைந்து முதல் நிலைக்கு முன்னேறும். அரசின் துறைகள் எல்லாம் குற்றம் ஏதும் இல்லாத வகையிலே தர்மத்தின் வழியில் நடந்து மக்களின் நலனை பெரிதாக எண்ணி செயல்பட வேண்டும். அரசின் துறைகள் தருமத்தின் வழியில் நடந்திட்டால் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்குமப்பா.

அவ்வாறு இல்லாமல் தமிழக மக்களும் அதிகாரிகளும் இனியும் சுயநலத்துடன் வாழ்ந்திட்டால், ஞானம் இல்லாத வஞ்சத்துடனும் களவு லஞ்சம் லாவண்யங்களில் ஈடுபட்டு தன்னலமாக தருமநெறி மீறி நடந்து பேராசையுடன் வாழ்ந்திட்டால், இயற்கையும் பொய்த்துப் போகும், நாட்டிற்கு வளமளிக்கும் மழை வளமும் குன்றி போகும். மக்களுக்கு தூய்மையான காற்று கூட கிடைக்க முடியாத அளவிற்கு மக்கள் மனம் மாசுபட்டது போல காற்றும் மாசுபாடு அடையும். இயற்கை வளமும் குன்றி போகும். அதுமட்டும் இல்லாது நாடு இயற்கையின் கோபத்திற்கு ஆளாகி நாட்டினில் இயற்கை பேரிடர்கள் உருவாகும், மக்கள் நலனை பாதிக்கும், மக்களுக்கு நோய்களும், நோய் குற்றங்களும் உருவாகுவதோடு மக்களுக்கு பல வகையில் அழிவு உண்டாகும்.

ஆதலினால் இனியாகினும் மக்களிடத்தும் மக்களை ஆள்வோரிடத்தும் நல்ல மாற்றங்கள் உருவாகிட வேண்டும். மக்களும் ஆள்வோரும் நல்ல வழியில் சென்று நல்வாழ்வை வாழ்ந்திட்டால் நாட்டின் வளம் பெருகி தமிழகமே பாதுகாப்புமிக்க நல்நாடாக பெருமையுடன் உயர்வடையும்.

பெருமைமிக்க தமிழக பூமியில் புண்ணிய தேசத்தில் பேராசான் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் ஆற்றுகின்ற தானதருமப் பணிகள் வளர்ச்சியடைந்திட வருங்காலங்களில் எல்லா தரப்பு மக்களும் அரங்கனை ஏற்றுக் கொண்டு அரங்கர் தம்மை குருவாய் ஏற்று வணங்கி அரங்கர் கூறும் தருமநெறியை ஏற்று மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனும் நல்உள்ளத்தோடு தருமநெறிபட வாழ்ந்து வர, நல்மாற்றங்கள் எல்லாம் உருவாகி தமிழகமும் இந்தியாவும் நல்ல நிலையில் முன்னேறிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்தியமகரிஷி.

–சுபம்–